//பதிவு அஞ்சல்//

இராணிப்பேட்டை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்.

நி.மு.எண்.182/அ1/2020,நாள்: .04.2024

பொருள் பள்ளிக்கல்வி - கருணை அடிப்படை நியமனம் - வேலூர் மாவட்டம் - வேலூர். ஈ.வெ.ரா. நாகம்மை அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி - தமிழ் ஆசிரியர் - திருமதி கே.பி. கெஜலட்சுமி என்பார் பணிக்காலத்தில் 17.11.2000-இல் இறப்பு - வாரிசுதாரர் (மகள்) திருமதி எஸ்.ரேவதி என்பார் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்ட நாளான 04.11.2016 முற்பகல் பணிவரன்முறை செய்யப்பட்டது - இளநிலை உதவியாளர் நியமனத்தில் விதித்தளர்வுகள் ஏதும் இல்லாததால் அரசளவில் பதிவு செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை - அசல் பணிப்பதிவேடு மற்றும் சான்றுகள் அனுப்புதல் - சார்பு

பார்வை.

1. வேலூர் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.0036/அ1/2013, நாள்: 26.10.2016
2. இராணிப்பேட்டை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், ந.க.எண்.182/அ1/2021, நாள்: 11.04.2022
3. அரசுக் கடித எண்.1308/ப.க.4(1)/2023-1, பள்ளிக் கல்வித் துறை, லைமைய செயலகம், நாள்: 06.11.2023
4. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், ந.க.எண்.41477/ஜே/இ1/2022, நாள்: 15.12.2023

.........................

வேலூர் மாவட்டம், வேலூர், ஈ.வெ.ரா. நாகம்மை அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்து, பணிக்காலத்தில் காலமான திருமதி கே.பி. கெஜலட்சுமி என்பாரின் வாரிசுதாரர் (மகள்) திருமதி எஸ். ரேவதி என்பாருக்கு பார்வை (1)-இல் காணும் ஆணையின்படி, ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டம், சயனபுரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு இளநிலை உதவியாளராக பணி வாய்ப்பு வழங்கப்பட்டது. தற்போது மாறுதலில் சென்னை, விருகம்பாக்கம் ஜெய்கோபால் கரோடியா அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியளராகப் பணிபுரிந்து வரும் திருமதி எஸ். ரேவதி என்பாருக்கு, அன்னார் பணியில் சேர்ந்த நாளான 04.11.2016 முற்பகல் முதல் பார்வை (2)-இல் கண்டவாறு இராணிப்பேட்டை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரால் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

...2

பார்வை (3)-இல் காணும் அரசுக் கடிதம் மற்றும் பார்வை (4)-இல் காணும் செயல்முறைகளில் பின்வருமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது

"கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட தனியர்களின் பணியினை வரன்முறை செய்திட அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள்: 01.08.2018 -ன்படி "தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு பெற தேவையில்லை" என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், "இனிவருங்காலங்களில் கருணை அடிப்படையில் பணி நியமனங்களில் விதித் தளர்வு இல்லாத நேர்வுகளில் பணிவரன்முறை செய்த பின் அரசளவில் பதிவு செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்காண் தெளிவுரையினை பணிப் பதிவேட்டில் செய்யுமாறு சார்ந்த தலைமையாசிரியருக்குத் தெரிவிக்கப்பட்டு, தனியரின் அசல் பணிப்பதிவேடு மற்றும் கல்விச் சான்றுகள் இத்துடன் இணைத்து சார்ந்த தலைமையாசிரியருக்கு அனுப்பப்படுகிறது.

**இணைப்பு:**

1. அசல் பணிப்பதிவேடு
2. பத்தாம் வகுப்பு மதிப்பெண் பட்டியல்
3. பத்தாம் வகுப்பு உண்மைத் தன்மைச் சான்று (அசல்)

முதன்மைக் கல்வி அலுவலர்,
இராணிப்பேட்டை

**பெறுநர்**

சார்ந்த பணியாளர் (தலைமையாசிரியர் மூலமாக)

**நகல்**

1. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை),
   இராணிப்பேட்டை.
2. தலைமையாசிரியர்,
   ஜெய்கோபால் கரோடியா அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி,
   விருகம்பாக்கம், சென்னை-600 092.